உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

நாள் : 25.06.2021

பெறுநர்:
**மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,**
**தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாநில உள்துறை அமைச்சர்,**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்,**
**புனித ஜார்ஜ்கோட்டை,**
**சென்னை-600009.**

## காவல் துறையில் போர்கால அடிப்படையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள்..!

**xxxxxx**

சிறப்புடையீர் வணக்கம்.

காவல்துறையினரை பார்த்தால் மக்கள் மனதில் மரியாதையும்; குற்றவாளிகளுக்கு பயமும் வரவேண்டும். ஆனால், இவை இரண்டுமே இப்போது நடைமுறையில் இல்லை. இந்த குறைபாடு போர்கால அடிப்படையில் கலையப்பட வேண்டும். இல்லையென்றால், இது மிகவும் கவலைக்குரிய ஒன்றாக மாறிவிடும்.

1996-ம் ஆண்டு அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், 'காவல்துறையின் முக்கால்வாசி ஈரல் அழுகி விட்டது' என்று சட்டப்பேரவையிலேயே சொன்னார். அவரது வார்த்தையை கேட்டு காவல்துறை உயர் அதிகாரிகள் முதல், கடைநிலை காவலர்கள் வரை பதறிப்போனார்கள். அன்று அவர் சொன்ன கருத்து; இன்றும் காவல்துறைக்கு அப்படியே பொருந்தும்.

கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் நல்ல அனுபவசாலி, அவரது அரசியல் பொது வாழ்க்கையில், காவல்துறையால் பலமுறை கைது செய்யப்பட்டு; பல்வேறு சித்ரவதைகளுக்கு உள்ளாகி; பல ஆண்டு காலம் சிறையில் அவதிப்பட்டவர். அதனால்தான் அவர் காவல்துறையை அவ்வளவு எளிதில் நம்பவே மாட்டார்.

காவல்துறை அதிகாரிகள் எப்போது; எப்படி வேண்டுமானாலும் மாறுவார்கள்?! அவர்களை "பாம்புனு தாண்டவும் முடியாது; பழுதுனு மிதிக்கவும் முடியாது" "பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்ற பழமொழிகள்தான் காவல்துறை அதிகாரிகளுக்கு பொருத்தமாக இருக்கும்.

விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில காவல்துறை அதிகாரிகளைத் தவிர; மற்ற அனைவருக்கும், ஏதோ ஒரு வகையில் குற்றவாளிகளோடும், குற்றவாளிகளுக்கு நெருங்கிய நபர்களோடும் மற்றும் குற்றப் பின்னனி உள்ள நபர்களோடும் நெருக்கமான உறவு மற்றும் தொடர்பு இருக்கிறது. இது எதற்காக என்றால் தனிப்பட்ட ஆதாயத்திற்காக....!- இதை இங்கு யாரும் மறுக்க முடியாது.

<u>அதிகாரிகளின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை இங்கு நான்கு வகைகளாக பிரிக்கலாம் :</u>

1. ஆளும் கட்சிக்கு அடிபணிவது; ஜல்ரா அடிப்பது; ஆளும் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே எப்போதும் ஆதரவாக செயல்பட்டு ஆதாயம் பெறுவது.

2. மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு, அரசுக்கு எதிராக செயல்படக்கூடிய எதிர்கட்சியினருக்கும்; பிற அமைப்புகளுக்கும் ஆதரவாக செயல்பட்டு ஆதாயம் பெறுவது.

3. ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி; எதிர்கட்சியாக இருந்தாலும் சரி; ஏன் குற்றவாளிகளாகவே இருந்தாலும் சரி, அதைப்பற்றியெல்லாம் கடுகளவும் கவலைப்படாமல், யார் அதிகமாக பணம் கொடுக்கிறார்களோ; அதை வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் தார்மீக ஆதரவாக **(Moral Support)** செயல்பட்டு ஆதாயம் பெறுவது.

4. அய்யோ பாவம்; 'நிர்வாணமான உலகத்தில் கோவணம் கட்டியவன் கிறுக்கன்' என்ற பழமொழிக்கு ஏற்றவாறு, "நீதிடா; நேர்மைடா"-என்று யாருக்கும் அடிபணியாமல், லஞ்சம், லாவணியத்திற்கு ஆசைப்படாமல்; சட்டத்திட்டங்களுக்கு மட்டுமே உட்பட்டு, தனது மனசாட்சிக்கு மட்டுமே கட்டுப்பட்டு, அரசு வழங்கும் சம்பளம் மட்டுமே போதும் என்ற மனநிறைவோடு செயல்படும் நேர்மையான மனிதர்கள். இத்தகைய நல்ல மனிதர்களை அவர்கள் குடும்ப உறுப்பினர்கள்கூட மதிக்க மாட்டார்கள் என்றாலும்; சமூகத்தில் இவர்களுக்கென்று ஒரு நல்ல மரியாதை இருக்கிறது என்பதை மறுக்கவும் முடியாது; இவர்களை யாரும் திரைப்போட்டு மறைக்கவும் முடியாது.

மேற்குறிப்பிட்ட இந்த நான்கு வகையினர்களில், முதல் மூன்று வகையினர் மிகவும் ஆபத்தானவர்கள் என்பதை இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இவர்கள்தான் நாட்டில் நடக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஏதோ ஒரு வகையில் அன்றாடம் காரணமாக இருக்கிறார்கள்.

**இதற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டுமானால், அரசியல் தலையீடு மற்றும் குறிக்கீடு இல்லாத 'மாநிலப் பாதுகாப்பு ஆணையம்' அமைக்க வேண்டும்:**

1. காவல்துறையினரின் அன்றாட நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

2. காவல்துறையினரால் அரசுக்கு களங்கமோ மற்றும் அப்பாவி பொதுமக்களுக்கு சேதமோ, ஏதாவது பிரச்சனையோ ஏற்பட்டால், அதை போர்கால அடிப்படையில் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

3. அனைத்து காவல்துறை உயர் அதிகாரிகளும், காவல் நிலைய அதிகாரிகளும் ஒரு இடத்தில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் மட்டுமே பொறுப்பில் இருக்க வேண்டும்.

4. சட்டம் - ஒழுங்கு பொறுப்பையும்; குற்றப் புலனாய்வுப் பொறுப்பையும் தனித் தனிப் பிரிவுகளாக்க வேண்டும்.

5. காவல்துறையினரின் நியமனம், இட மாற்றம், பதவி உயர்வு, இதர நடவடிக்கைகள் அனைத்தையும் 'காவல் நிர்வாக வாரியம்' அமைத்து மேற்கொள்ள வேண்டும்.

6. காவலர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் மீதான புகார்களை போர்கால அடிப்படையில் விசாரித்து, உரிய சட்ட நடவடிக்கை எடுக்க மாநில மற்றும் மாவட்ட அளவிலான புகார் ஆணையங்களை ஏற்படுத்த வேண்டும்.

7. 'வாகன சோதனை'-என்ற பெயரில் ஒரு நாளைக்கு இத்தனை வழக்குகள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்; இவ்வளவு ரூபாய் அபராதம் வசூலிக்க வேண்டும் என்று காவல் நிலைய அதிகாரிகளுக்கு, காவல்துறை உயர் அதிகாரிகள் 'இலக்கு (Target) நிர்ணயம்' செய்து நிர்பந்தம் செய்வதை உடனே நிறுத்த வேண்டும். இதனால் தான் காவலர்களுக்கும் -பொதுமக்களுக்கும் அடிக்கடி நேரடி மோதல் போக்கு உருவாகி, பல இடங்களில் விரும்பதகாத சம்பவங்களும், சில நேரங்களில் உயிரிழப்புகளும் ஏற்பட்டு, கலவரங்களுக்கு இது முக்கிய காரணமாகிவிடுகிறது.

'மாநிலப் பாதுகாப்பு ஆணையம்' என்பது தங்களுக்கு ஒன்றும் தெரியாத விசியமல்ல; 2008-ல் தமிழ்நாட்டில் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது; நீங்கள்தான் அப்போது துணை முதலமைச்சராக இருந்தீர்கள். அன்றைய ஆட்சிதான் இதற்கான சட்ட முன்வரைவைப் பேரவையில் கொண்டுவந்தது. அப்போது துணை முதலமைச்சராக இருந்த உங்கள் தலைமையிலான தேர்வுக்குழு தான், அதை 2009-ல் ஆய்வுக்கு அனுப்பியது.பிறகு அடுத்து ஆட்சி மாறியதும், அந்த முன்வரைவு காலாவதியாகி விட்டது என்பதை, இங்கு நான் தங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

கற்ற கல்வியும்; பெற்ற அனுபவமும் மக்களுக்காக பயன்பட வேண்டும். எனவே, போர்கால அடிப்படையில் மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தை அமைத்து; காவல்துறையில் சிறப்பான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, தமிழ்நாட்டின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துமாறு, இதன் மூலம் கேட்டுக்கொள்கின்றேன். தங்களின் நேர்மையான; நேர்மறையான பதிலுக்காக காத்திருக்கிறேன்.

மிக்க நன்றி.

என்றும் தோழமையுடன்,




Dr.DURAI BENJAMIN, BAMS., M.A.,SOCIOLOGY,
Ex. Honorary A.W.Officer, Govt Of India,
Editor & Publisher,
www.ullatchithagaval.com
Tamil Online Media
Mobile No.98424 14040.
E-mail : ullatchithagaval@gmail.com
No: 4 Trichy-Dindigul Main Road, Pon Nagar,
Tiruchirappalli-620001,Tamilnadu.